# பூவுலகில் தத்தாத்திரேயர் எடுத்த அவதாரங்கள்

# ஸ்ரீ நரசிம்ம ஸரஸ்வதி

## சாந்திப்பிரியா

(ஜுலை, 2007 ஆம் ஆண்டு ஆன்மீக ஆலயம் இதழில் வெளியான கதையின் விரிவாக்கப்பட்ட மறு பதிப்பு இது )



இவர் தத்தாத்திரேயர் பரம்பரையில் வல்லபாவிற்கு அடுத்த அவதாரம். மகராஷ்டிராவில் வராட் என்ற மாவட்டத்தில் ஒரு பிராமணக் குடும்பத்தில் பிறந்தவர். அவர் தந்தையின் பெயர் மாதவா, தாயாரின் பெயர் அம்பா என்பது. முன் பிறவியில் அம்பிகா என்ற ஒரு பிராமணப் பெண் நதியில் விழுந்து தற்கொலை செய்து கொள்ள முயன்ற பொழுது அவளை தடுத்து நிறுத்தி அடுத்த் பிறவியில் அவளுக்கே மகனாகப் பிறப்பதாக வாக்கு கொடுத்ததை

நிறைவேற்றவே, முன் பிறவியில் அம்பிகா என்று இருந்தும் இந்த பிறவியில் அம்பா எனவும் பிறந்தப் பெண் மூலம் ந்ருசிம்ம சரஸ்வதி ஸ்வாமியாக வல்லபா அவதரித்தார் என்றும் நம்பப்படுகின்றது. அம்பிகா சனிப்பிரதோஷம் தவறாமல் செய்து வந்தவள். அவளுடைய தந்தையும் மிகவும் ஆசாரமானவர். பூஜை, புனஸ்காரங்கள் செய்து வந்தவர். அதனால்தான் தத்தர் அனுக்கிரகத்தினால் ந்ருசிம்ம ஸ்வாமியை தன் மகனாகப் பெற்றெடுத்தார்.

ந்ருசிம்மஸ்வாமி பிறந்த உடனேயே ஓம், ஓம் என்ற நாமத்தை உச்சரித்தபடிப் பிறந்தார். குழந்தைப் பருவத்திலேயே பல விதமான அற்புதங்களை செய்தார் ந்ருசிம்மஸ்வாமி. பொதுவாக ஒரு பழமொழி உண்டு. ஒருவன் கடவுள் அனுக்கிரகம் பெற்று எந்த தொழில் துவங்கினாலும் வெற்றி பெற்று பெரும் செல்வந்தனாக மாறிக் கொண்டே இருந்தால் அவன் கைகளால் தொட்டதெல்லாம் தங்கமாகும் என்று வேடிக்கையாகக் கூறுவது உண்டு. ந்ருசிம்மஸ்வாமி விஷயத்தில் அதுவும் நடந்தது. அவர் குழந்தையாக இருந்த பொழுது ஒரு நாள் இரும்புத் துண்டை கையில் எடுக்க அது தங்கமாக மாறியது. ஏதோ ஒரு மாயம் போல இருக்கின்றதே என எண்ணி அந்தக் குழந்தையை உள்ளே எடுத்துக் கொண்டு போய் வேறு ஒரு இரும்புத் துண்டை அதன் கையில் தர அதுவும் தங்கமாக மாறியதாம். இபப்படிப்பட்ட கதைகள் அவரைக் குறித்து உண்டு.

அவருக்கு உபனயனம் செய்த பொழுது பண்டிதர்கள் கூறாமலேயே வேதங்களை ஓதத் துவங்கி அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தினார். வயதுக்கு வந்ததும் வாரணாசிக்குச் சென்று யோகா முறைகளைக் கற்று தவம் இருந்தார். அங்கு கிருஷ்ண சரஸ்வதி என்ற துறவியின் சிஷ்யனாக இருந்து திட்சைப் பெற்றார். அவருடைய பெயரை ந்ருசம்மஸ்வாமி என அவர்தான் மாற்றினார். பெரும் புகழ் அடைந்து வந்த அவர் பல பண்டிதர்களை வாக்குவாதங்களில்

தோற்கடித்தார். இவருடைய கால கட்டத்தில் தத்தாத்திரேயர் புகழ் பெரும் அளவில் பெருகியது. மத மாற்றங்கள் குறையலாயிற்று. அது மட்டும் அல்ல குரு சிஷ்யப் பரம்பரைகள் இவர் காலத்தில்தான் பெருகலாயிற்று. பரமாத்மனே குரு என்பார்.

மத வழிபாடுகளும், தெய்வ நம்பிக்கைகளும் இவர் காலத்தில் பெருகித் தழைத்தது. பார்லிவைஜியநாத் என்ற இடத்தில் ஒரு வருட காலம் தனிமையில் அமர்ந்து கொண்டு தவம் இருந்தார். அமராபூர் என்ற இடத்தில் பன்னிரண்டு வருடங்கள் இவர் வாழ்ந்து வந்ததால் அந்த கிராமத்தின் பெயரை நசோபாவாடி, என்றும் ந்ருசிம்வாடி என்ற பெயரலும் அழைக்கலாயினர். அங்கிருந்து கங்காபூர் என்ற இடத்திற்கு சென்று இருபது வருடங்களுக்கு மேல் அங்கிருந்து கொண்டு மக்களின் துயர் துடைத்து வந்தார். அங்கு இருந்த பொழுதுதான் பல அற்புதங்களை அவர் நிகழ்த்தினார். அவர் உபதேசித்த முக்கியமான குரு போதனை என்ன எனில் ‘குரு என்பவர் மும்மூர்திகளின் அவதாரமானவர், அனால் உருவ அமைப்பில் மட்டுமே மாற்றம் கொண்டவர். சிவனுக்கு மூன்று கண்கள், குருவிற்கு இரண்டு கண்கள், பிரும்மாவிற்கு நான்கு தலைகள், குருவிற்கு ஒரே தலைதான். அது போல திருமாலுக்கு நான்கு கைகள், குருவிற்கு இரண்டு கைகள் மட்டுமே’

வாரணாசி, திரியம்பகேசுவரர், பத்ரிநாத், கங்காசாகர், ஒடும்பபூர், கங்காபூர், நாசர்வாடி போன்ற இடங்களில் அவர் இருந்தார். அவருக்கு இந்துக்கள் மட்டும் அல்ல முஸ்லிம் மதத்தில் இருந்தும் கூட பக்தர்கள் இருந்தனர் என்பது ஒரு பெருமையான விஷயமாகும். இருபது வருடங்கள் வட தேசங்களில் யாத்திரை செய்த பின் ஒரு முறை தன் சொந்த வீட்டிற்கும் சென்றார். அந்த நேரத்தில் அவரை பலர் தங்களுடைய வீடுகளுக்கு அழைத்திருந்தனர். எவர் மனதையும் புண்படுத்தலாகாது என எண்ணிய

ஸ்வாமிகளும் ஒரே நேரத்தில் கூப்பிட்ட அனைத்து பக்தர்கள் வீட்டிலும் தரிசனம் தந்தார் என்ற செய்தி காட்டுத் தீ போலப் பரவியது. பேய் பிசாசு பிடித்திருந்த பக்தர்களின் உடலில் இருந்து அவர்களைப் பிடித்து இருந்த ஆவிகளைத் துரத்தினார். கங்காபூரில் இருந்த பொழுது தன் பக்தர்களுக்கு பீமா-அம்ஜாரா என்ற நதிகள் சங்கமிக்கும் இடத்தில் இருந்த ஒரு நெல்லி மரத்தைக் காட்டி எவருக்கு துயரங்கள் தோன்றுமோ அவர்கள் அங்கு வந்து வேண்டிக் கொண்டால் துயரம் விலகும் என்று கூறி அதை ஒரு புண்ணியத் தலமாக மாற்றினார். இப்படிப்பட்ட பல அற்புதங்களை நிகழ்த்தி வந்தவர் கங்காபூரில் இருந்து கிளம்பிச் சென்று வாழை இலையில் செய்த படகில் பூக்கள் சுழ அமர்ந்து கொண்டு நதியில் சென்று மறைந்தார். அவர் தன் பக்தர்களிடம் கூறி இருந்தபடி அந்த பூக்களால் நிறைந்து இருந்த படகு பூக்களுடன் அவர் கிளம்பிச் சென்ற இடத்திற்கு திரும்பி வந்து சேர்ந்து ஸ்வாமிகள் நல்லபடியாக எங்கு செல்ல வேண்டுமோ அங்கு சென்று விட்டார் என்பதை கூறாமல் கூறியது.